JobAccess
Driving disability employment

# தகவல் ஏடு
# உடலியலாமை உள்ளவர்களுக்குக் கிடைக்கும் நிதியுதவிகள்

உடலியலாமை உள்ளவர் என்ற முறையில், பணியிட மாற்றியமைப்புகளைச் செய்யவும், உங்களுடைய வேலையைச் செய்ய உங்களுக்குத் தேவைப்படும் உபகரணங்களை வாங்கவும் ஆகும் செலவுகளுக்காக உங்களால் 'பணியிட ஒத்தாசை நிதி' (Employment Assistance Fund (EAF)) யை அணுக இயலக்கூடும்.

வேலை தேடவும், வேலைக்கு ஆயத்தமாகவும் உங்களுக்குத் தேவைப்படக்கூடிய ஒத்தாசை செலவுகளுக்காகவும் EAF வசதியைப் பாவிக்க இயலும்.

EAF வசதியைப் பாவித்து செலுத்தவல்ல செலவுகளில் பின்வருவன சிலவாகும்:

- ஒத்தாசைத் தொழில்நுட்பங்கள், மின்னியல் மற்றும் தொடர்பாடல் சாதனங்கள் போன்ற பணியிட மாற்றியமைப்புகள் மற்றும் உபகரணங்கள்;
- தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்கள்;
- 'ஆஸ்லன்' (அவுஸ்திரேலிய சைகைமொழி) மொழிபெயர்த்துரைப்பு;
- கணினி மென்பொருள் மற்றும் மென்பொருள் தரவுயர்வுகள்;
- விசேட ஆதரவுதவி மற்றும் பயிற்சித் திட்டங்கள்;
- மோட்டார் வாகனங்களை இயக்குவதற்குத் தேவைப்படும் மாற்றியமைப்புகள்; மற்றும்
- மன நலப் பிரச்சினைகள் அல்லது கற்றல் குறைபாடுகள் உள்ளவர்களுக்குத் தேவைப்படும் விசேட ஆதரவுதவி.

EAF- ஐப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள், அல்லது 'ஜாப்அக்ஸெஸ்' அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**